உ

கடவுள் துணை.

சகாதேவரருளிச்செய்த

பெண்கள் ஜாதகமென்னும்

ருதுநூல் சாஸ்திரம்.

பரிகாரத்துடன்.



மீ. முகம்மதுராவுத்தர் அவர்களால்

அச்சிட்டுத்தர கேட்டுக்கொண்டபடியால்

கொழும்பு செட்டித்தெரு, புத்தக்ஷாப்

கா. உதுமான்கனிராவுத்தர்

அவர்களால்

சென்னை,

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

இதன் விலை அணா-க.

சென்னை ஆச்சாரப்பன் தெரு நெ. 84.

உ

கடவுள் துணை

ருதுநூல்சாஸ்திரம் பரிகாரத்துடன்.

இத்தரையில் மானிடமென்றுதவிகொண்ட இருபாலிற்பெண்
களிட ருதுநூலப்பா, முதத்பெற்ற முன்னோர்கள் சொன்னவாக்கு
மொழியொன்றும்தப்பாதுமுன்னோன்சாக்ஷி, சத்திசிவன்மால்சாக்ஷி
குகனும்சாக்ஷி,சர்வவுயிரைப்படைக்கும்பிரமன்சாக்ஷி, எத்திசையும்
பரிகாரத்தோடுசொன்னேனென் தாயார்சரஸ்வதினிருதாள்காப்பே.

ருதுவாகு மாதப்பலன் விருத்தம்.

சித்திரையில் புருஷருக்கு ஆகாதப்பா, சுகமடைவாள் வைகா
சிமாதமானால், புத்ரசம்பத்தாயிருப்பாள் ஆனிமாதம், புருஷரை இ
ச்சிப்பாள் ஆடிமாதம், சித்திரம்போல்பிள்ளைகளை மிகவேபெற்று சி
றப்படைவாள் ஆவணியில்ருதுவேயானால் பக்தியுடன்விருத்தியுண்
டுபுரட்டாசிக்கு பதிவிரதையா யிருப்பாள் பரிட்சைப்பாரே.

பாரப்பா அற்பசியில்ருதுவேயானால் பிள்ளைகளையீன்றெடுத்து
விதவையாவாள், பாரப்பா கார்த்திகையில் ருதுவேயானால்பலரையு
மேதூஷிப்பாள் கோபியாவாள், பாரப்பாமார்கழியில் ருதுவேயானா
ல்மக்களுண்டு பொருளுமுண்டு மனதுநோகாள், பாரப்பாதைமாத
ம் ருதுவேயானால் புண்யவதியாயிருப்பாள் பெருமைகொள்ளே.

பெருமையுண்டு திரவியமுங் குறைவிராதுபாக்கியவதியாயிரு
ப்பாள் மாசிமாதம், அருமையடா பங்குனியில் ருதுவேயானால்ஆயி
சுண்டு மக்களுமே அதிகமுண்டு, மருமமா இருந்துதடா இந்தநூல்
தான் மண்டலத்தி லனைவோர்க்கும் வேணுமென்று, சிறுமணவூர்மு
னுசாமி எழுதிவைத்தான் சித்திரம்போல் எதிர்மொழியைக் காண
லாமே.

சித்திரைமாத தோஷத்திற்கு சாந்தி.

சித்திரையில்ருதுவானதோஷத்திற்கு செய்யவேபரிகாரமுறை
யைக்கேளும், பத்தினிக்கும்புருடனுக்கும் புதியஆடை பாங்காக உ
டுத்தியேதான் குந்தவைத்து, முற்றிலுமேதுவாரங்கள்செய்ததாகம
ண்சல்யம் இருவரிட சிரசில்வைத்து, சுத்தஜலம்வார்த்தபின்னர் சூ
ரையிட்டு சுமங்கிலிக்கு ஆடைகளை தானஞ்செய்யே.

ஆடியிலே வடிவுகொண்ட பெண்தானப்பா அனைவரையும் இ
ச்சிப்பாளென்பதற்கு தேடியேபலவிதமாங்கனிகளெல்லாந் தாம்பா
ளந்தனில்வைத்து பூவும்வைத்து கோடியென்றசேலைகட்டிகுந்தவை
த்து குமரிக்கிகாட்டியதை திருஷ்டிசுத்தி, பாடியென்றபிள்ளைகளா
ய்பலருக்கீய்ந்தால் ஆடிமாத தோஷமது மகன்றுபோச்சே.

அற்பசிமாதம் தோஷத்திற்கு சாந்தி.

அற்பிசியில் ருதுவான தோஷத்திற்கு அப்பனே சாந்தியதுமு
றையைக்கேளு, கற்புடைய சுமங்கிலியை கண்டழைத்துகருத்தாக
அப்பியங்கம்செய்துவைத்து பொற்றாலிசெகப்புடை மஞ்சள்குங்கு

மம்பூவுடனே தாம்பூலமிதுகளெல்லாம், நற்கொடைபோல்தானமது செய்வையாகில் நல்லதொருஅற்பிசியில் தோஷந்தானே.

கார்த்திகைமாதம் தோஷத்திற்கு பரிகாரம்.

கார்த்திகைமாத தோஷங்கடக்கவே சாந்திகேளும் பார்த்துநீ சிவாலயத்தில் பசுவுடனெய்தானப்பா, வார்த்து நீ தீபம்வைத்தால் வஞ்சிக்கோர்தோஷமில்லே, கீர்த்தியாம் கவனமாகசித்தர்கள்சொன் னவாக்கே. ருதுவாகும் வாரத்தின் பலாமலன்.

ஆமப்பா ஞாயரென்றகிழமையானல் ஐயையோ வியாதியினல் மெலிந்துபோவாள், ஆமப்பா திங்களில்ல ருதுவேயானு லருந்ததி போலிருப்பாள் கற்புகாப்பாள், ஆமப்பா செவ்வாயில் துக்கமுண்டு அதிகசுகங்கிடையாது விதவையாவாள், ஆமப்பா புதன்கிழமையின் லேயுண்டு பொருளுமுண்டு புத்தியுண்டு புகழுண்டாமே.

வியாழமென்றகிழமையிலே ருதுவேயானல் விளம்பினர்பாக்கி யவதியென்றேசொல்லி, தாழ்வில்லே வெள்ளியென்ற கிழமையானு ல் தன்புருஷன் மனம்போலே பணிகள் செய்வாள், பாழானசனிக்கி ழமைஆகாதப்பா படமூடியா துன்பமுடன் தரித்திரமாவாள் ஏழா னவாரபலன் இதுவேயாச்சு இடப்பலனேச் சொல்லுகிறேன்ஏந்திக் கொள்வீர்.

ஞாயிற்றுக்கிழமையின் தோஷத்திற்கு பரிகாரம்

ஆதியாம்வாரந்தன்னில் ஆனதோர்மாதுநல்லாள், வியாதியால்மெ லிவாளென்று விளம்பிய தோஷத்திற்கு கோதும்பை அரிசினலேகு மரிக்கி திருஷ்டிவாங்கி, வீதியில் அதிதிகட்கு விரைந்துநீ தானஞ் செய்வாய், செவ்வாய்க்கிழமை தோஷத்திற்கு பரிகாரம்

வீடுபோல் பந்தலது போட்டுமைந்தா வழியதற்கு இரண்டுபுரம் அமைத்துநீதான், நாடியேபெண்ணேயொருவழியாய்சென்று நலமா கமுக்காடிட்டு படுக்கச்சொல்லி, தேடியேஒருமூலேதிரையைமாட்டி தேன்மொழியை மறுவழியாய் வரவேசொல்லு, ஓடியேவந்தவுடன் அப்பியங்கஸ்நானம் உடனுகசெய்துசில தானங்கேளே.

தானமது சுமங்கிலியை யழைத்துவந்து தக்கபடிஅப்பியங்கம் செய்துவைக்க, வேணுமடா சிகப்புநிறசேலேயொன்று வெத்திலேயும் பாக்கு-மல-மஞ்சள் குங்கம், ஆனமட்டும் சுயம்பாகம் இதுகளெல் லாம் அறிவையர்க்குதானமதுசெய்தாயானல், காணுவோம்செவ்வா யின்கிழமைதோஷம் கண்காணுதோடுமடா இன்னங்கேளே.

சனிக்கிழமை தோஷத்திற்கு பரிகாரம்.

பங்கமடாசனிக்கிழமை கொடியதோஷம் பரிகாரஞ்செய்யவெ ன்றால் உளவுகேளு, வெங்கலமாம் பாத்திரத்தில் எள்ளினெண்ணெ ய்வார்த்தந்தப்பெண்ணமுகைப்பார்க்கச்சொல்லி, மங்காதபசும்பா லேகறந்துவேறே மடக்கிலேவார்த்தந்தப்பெண்முன்காட்டி, எங்கொ ருவர்க்கானுலும்தானஞ்செய்தால் ஏகுமடாசனிக்கிழமை தோஷந் தானே.

ருதுவாகு மிடத்திற்கு பலாபலன்.

வீட்டுக்குவெளியில்விபசாரியாவாள்,வனமென்றபூந்தோப்பில் சம்பத்துண்டு, வீட்டுக்குஉள்ளானல் ஒழுக்கமுண்டு விடுதி என்ற படுக்கையிலே சுகமேயடைவாள், கேட்டுக்கொள் பசுந்தொழுவந் தன்னிலானல் கெடுதியில்லைப்திவிரதையாயிருப்பாள், நாட்டுக்குள் நடக்கையிலேருதுவேயானல் நல்லதப்பாசுகமடைவாள் நம்புவாயே

கும்படா நீர்க்கரையில் ருதுவேயானல் நல்லமழையுண்டதிக ஆயுசுண்டு, வம்படாபடுக்கையிலே ருதுவானக்கால்வளர்த்தெடுத்த தந்தையவனிறந்து போவான், கும்படா ஸ்ரீகளுக்கு நடுவேயானல் குறைவில்லை தனசம்பத்தாயிருப்பாள்; கொள்ளைளியிலேருதுவானக் கால்திரவியத்தோடேயதில் பூமியுண்டாம்.!

நிற்கையிலே ருதுவானல் நன்ருய்வாழ்வாள் நிர்வாணமாயிருந் தால் கிலேசமப்பா, சாதம்புசிக்கையிலே வெகுநன்மைஎண்ணலாகு ம்பிறர்வீட்டிலனைவர்கட்குவிரோதியாவாள், மிக்கதொருகோயில ந்தன்னிலானல் மேன்மையில்லை யுபாயமதாய்வாழ்ந்திருப்பாள்,!மிக் கதொருகிராமத்தின்மத்திலானலடையன்றி விபசாரியாவாள்பாரே.

ருதுவான இடத்தைக்கொண்டு லக்கினந்தெரிந்துக் கொள்ளல்.

குடியிருக்கும் வீட்டுக்குள் ருதுவேயானல் கூரடாமேஷலக்கி னங்குறித்துக்கொள்ளு,இடமாகபசுத்தொழுவந்தன்னிலானல்எழு தடா ரிஷபலக்கின மென்றுநீதான் வடிவழகி நிர்வாணமா யிருக்கும் போதுவடிவுகண்டால் மிதுநலக்கின மென்றேசொல்லு தடமென்ற நீர்க்கரையில் ருதுவானக்கால் தடையன்றி கடகலக்கின மென்றே சொல்லே.

சொல்லப்பா வீட்டுக்கு வெளியேயானல் சிங்கலக்கினமென்று நீசிருய்சொல்லு, சொல்லப்பா பூவனத்தின் தோப்பிலானல் சொகு சான கன்னிஎன்ற லக்கினந்தானே, அல்லடா கிருமத்தின் மத்தியி லானல் வறையடா துலாலக்கின மென்றுநீதான் வில்லடா அசல்வீ ட்டில் ருதுவேயானல் விருச்சிக லக்கினமென் றியம்புவாயே, தன் வீட்டில்ருதுவானளென்றுசொன்னல் தனுசென்றலக்கினந்தான் த டையேதப்பா, பெண்ணவள்தான் கிணற்றருகே ருதுவேயானல்பே சடா மகரலக்கினம் யென்றுநீர்தான் வெண்ணவே ஆறுகுளங்கரை யிலானல் எழுதடா லக்கினமது கும்பமென்று பண்ணுவது ஸ்தா னநீராடும்போது பகரடா மீன லக்கினம் பெரியோர் வாக்கே.

மேற்கூறிய கஉ-லக்கினங்களுக்கும் பலன்காண்க.

மேஷம்-தரித்திரர்	துலாம்-தனசம்பத்து
ரிஷபம்-சொற்பபுத்திரர்	விருச்சிகம்-விபசாரி
மிதுனம்-பதிபட்சமுடையவள்	தனுசு-உத்தமமத்திபமானவள்
கடகம்-வெகுபுத்திரருண்டு	மகரம்-மானமில்லாதவள்
சிங்கம்-புருஷனைவிட்டுநீங்குவாள்	கும்பம்-திரவியமுண்டு
கன்னி-பதிவிரதை	மீனம்-புத்திரருண்டு

ருதுவாகும்போது யார்பார்க்கிறார்களோ அந்ததெரிசனபலாபலன்.

தானேதான்கண்டாலுந் துக்கமப்பா தன்புருஷன் கண்டாலுந் துக்கமாகும், தேனனகன்னிகா ஸ்ரீகள்கண்டாள் தெய்வபத்தியொடுபுண்யவதியென்பார்கள், வீணைகைம்பெண்கள் கண்டாராகில் விதவையப்பா மங்கிலியமிழந்துபோவாள், வாணைஎண்ணெயிட்ட தலையர்கண்டால் வனிதையவள் தரித்திரமே யனுபவிப்பாள், வேசி கண்டால் போகபாக்கியமா யிருப்பாள், வியாதியஸ்தர்கண்டாக்கால்நோய்தானப்பா, தாசியொத்த வெள்ளாட்டி கண்டாளாகில் தரித்திரமே யனுபவிப்பாள்தரணிமீது, கூச்சமில்லாமங்கிலியஸ்திரீகள் கண்டால்குறைவில்லை சுமங்கிலியாய் வாழ்ந்திருப்பாள், நீச்சமதஸ்ரீ புருஷர்யார்கண்டாலும் நெறிதவறிஜாதிவிட்டு நீங்குவாளே.

திதிபலாபலன்.

பிரதமை-பாவியாயிருப்பாள், துவிதிகை-பாக்கியவதியா யிருப்பாள், திரிதிகை குழந்தைகளைப்பெருவாள், சதுர்த்தசி-பலபுருஷரை இச்சிப்பாள், பஞ்சமி-நன்மையுடையவள், சஷ்டிசண்டைக்காரியாயிருப்பாள், சப்தமி-புத்திரபாக்கிய முண்டாயிருப்பாள், அஷ்டமி-ராட்சசியாயிருப்பாள், நவமி-கிலேசமாயிருப்பாள், தசமிபுத்திரபாக்கிய முண்டாயிருப்பாள், ஏகாதசி சுபகரமாயிருப்பாள், துவாதசிபலரையும் தூஷிப்பாள் திரியோதசி-நல்ல தேஜசை யுடையவளாயிருப்பாள், சதுர்த்தசி- பாபஞ் செய்பவளா யிருப்பாள், பௌர்ணமி அயல்வீடுதிரிவாள், அமாவாசை தரித்திரமாயிருப்பாள்.

நட்சத்திரபலாபலன் நொண்டிச்சிந்து

அசுவனி சுபகரமாம்-பரணி-ஆகாது அயல்வீடு வாழபொருக்காள் கிர்த்திகை-தரித்திரமாம், ரோகணிக்குக்கிளிபோலேமதலைகள் மிகப்பெருவாள், மிருகசீரிடமானால்-மிக-சுசிகரமுடையவளாயிருப்பாள், திருவாதிரை-தரித்திரமாம், நல்லதிடமான புனர்பூசம் பதிவிரதை பூசம்-பதிபட்சமுடையவள், ஆயிலியம்-ஆகாது மெத்தவுங்கபடியடா மகம் புத்திரநாசமடைவாள், பூரமென்ற நட்சத்திரமாகாது, கெற்பநஷ்டமாம், உத்தரத்தில் தனதான்யம்,அஸ்தமது-உரவுபந்துக்களை ரக்ஷித்திடுவாள், சித்திரைக்குப் பதிவிரதை, அந்தசுவாதிவெகுபுத்திருண்டா யிருப்பாள், விசாகம் அழுக்குடையாள் அனுஷம்-விட்டுப்பிரியாள் கொண்டகணவனையே, கோட்டையில்ருதுவானால் மெத்தகெடுதியடா முற்றும்சிறையிருப்பாள்-மூலம்-புத்திருண்டு பூராடம்முழுதும்விசனத்தால் மூழ்கியிருப்பாள்-உத்திராடம்சம்பத்துடையாள் திரிகோணம் ஒழியாதபாக்கியத்தில் வாழ்ந்திருப்பாள், அவிட்டம்-பிள்ளையுண்டு, சதையம் ஆயுசு பூரணமுடையவளாம், பூரட்டாதியிலேருதுவானால் பிணியாளன்றனக்கே வாக்கைப்படுவாள், உத்திரட்டாதி என்றநட்சத்திரம் உல்லாசமாகவே வாழ்ந்திருப்பாள், ரேவதிக்கி-சகலசுகம் உள்ளளவும்ரொம்பவும்பெருமையாக வாழ்ந்திருப்பாள்.

(தர்)

விஷகம்பம்விசனமுண்டாயிருப்பாள், பிரீதிசந்தோஷமுண்டாயிருப்பாள், ஆயுஷ்மான் தீர்க்காயுசுண்டாயிருப்பாள், சௌபாக்கியசம்பத்துண்டாயிருப்பாள், சோபனம்-மங்களகரமாயிருப்பாள்-திரிதிகை-ஐக்கியமாயிருப்பாள், சூலம்-துர்மரணமுண்டாயிருப்பான், கண்டம்-வியாதியாயிருப்பாள், விருத்தி-நன்மையுண்டாயிருப்பாள் துருவம் பதிவிரதையாயிருப்பாள், வியாழம்-விதவையாவாள், அரிஷ்ணம்-யோகியாயிருப்பாள், வச்சிரம் நல்ல ரூபவதியா யிருப்பாள் சித்தி சகலசம்பத்துண்டாயிருப்பாள், வரியாள், விதிபதம்கொடிய விசனமாயிருப்பாள், பரிகாரம் உறவுக்குப் பகையாயிருப்பாள், சிவம்நல்லவளாயிருப்பாள், சுபம்-சந்தோஷமுண்டாயிருப்பாள், சுப்பிரம்-வியாதியால்மரணமாவாள், வைதிருதி-உயிர்வதைசெய்வாள்.

கரண பலாபலன்.

மவம்-சுகமுண்டா யிருப்பாள், காசி-விதவையாவாள், வணசி கொள்ளகொடுக்கவல்லாள், சதுஷ்பாகம்-சந்தோஷமில்லாதவள், நாகவம் நன்மையில்லாதவள், கிமிஸ்துக்கிணும் தரித்திரமாயிருப்பாள்

ஏழாமிடப் பலாபலன்.

சூரியன்-விதவையாவாள்-சந்திரன் குழந்தைகளை யிழப்பாள், செவ்வாய்-வேசையாவாள், புதன்-மலடியாவாள்-குருபாக்கியமில்லாதவளாயிருப்பாள், சுக்கிரன்வீடுவிட்டுப்போவாள், சனி-வியாதியாயிருப்பாள்-இராகு புத்திரனை யிழப்பாள், கேது உரவுக்குப் பகையாயிருப்பான்.

நாழிகைபலாபலன்.

ம-நாழிகையுள்ளாகில் உத்தமம்-உஎ-நாழிகைஉள்ளாகில்-மத்திமம், ஙம-நாழிகையுள்ளாகில்-அத்தமம்.

காலபலாபலன்

பிராதகாலமனால்-சுபம், முதற்பகலானால்தீர்த்தயாத்திரை, மத்தியானமாகில்-புத்திரசம்பத்துண்டு, பிற்பகலானால்சோரத்துவம்சாயங்காலமாகில்-வெகு புத்திரருண்டு, அஸ்தமானமாகில் வேசையாவாள், முன்ராத்திரி - தீர்க்காயுசுண்டு நடுராத்சிரி விதவையாவாள், பின்னிராத்திரியாகில்சுபமில்லாதவள் சந்திகளில்பாக்கியமற்றவள்

(ஸ்தனக்குறிப்பு)சாயங்காலமாகில் சூப்பிணங்கிபோலிருப்பாள், அர்த்தஇராத்திரியாகில்-இரண்டுகுய்யமுஞ் சுருங்கிப்போம்.

ஜாமபலாமலன்.

க-வது ஜாமமாகில் சுபமாயிருப்பாள்
உ-வது ஜாமமாகில் சுபகரமாயிருப்பாள்
ங-வது ஜாமமாகில் மங்கிலியமுண்டு
ச-வதுஜாமமாகில் பலரையும்வேண்டுவாள்

ஜாமஸ்தனக்குறிப்பு.

க-வது ஜாமம் ஏந்துகொங்கையுண்டு
உ-வது ஜாமம் குத்துமுலையுண்டு